**ARTICLE 58 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 126–136

# கள்ளியங்காட்டு மாரியம்மன் திருக்கோவில்

**Kalliyankattu Mariamman Temple**

*ஆய்வாளர்:* **ர. தமிழ்தானு**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.
tamildhanu2001@gmail.com

*நெறியாளர்:* **முனைவர் ம. சுந்தரமூர்த்தி**
பேராசிரியர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.

**Abstract**

Humans inhabit settlements established in suitable locations across this vast world. While living there, they have also lived in awe and fear of the natural forces surrounding them—earth, water, air, space, and fire. Believing in the existence of a power far greater than their own, they began to worship these elements as deities. Initially, they worshipped the trees and vegetation around them; later, they began planting stones, regarding them as divine, and worshipping them. They found fulfillment in offering the flowers and fruits they gathered to these stones. Similarly, they rejoiced in offering the meat from their hunts to the gods. These practices continue to this day in temples, observed as acts of fulfilling vows or making supplications. In modern times, keeping pace with civilizational progress, people sculpt idols, assign them specific names based on their attributes, and worship them. This is how deities and the associated festival traditions evolved. Against this backdrop, this article explores the history and festivals of the Kalliyankattu Mariamman Temple in the Gobi region.

**Keywords:** Temple – Cactus thickets – Kalyana Vinayagar – Flagstaff – Memorial stone – Horse statue.

**திறவுச் சொற்கள்:** கோவில் - கள்ளிக்காடுகள்- கல்யாண விநாயகர் - கொடி மரம்- தூரிக்கல்-குதிரைச்சிலை.

## முன்னுரை

பரந்து விரிந்த இவ்வுலகில் ஆங்காங்கு தமக்கு உகந்த இடங்களில் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டு மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். அப்படி வாழ்ந்து வரும் மனிதர்கள் தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சீற்றங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றைக் கண்டு அஞ்சியும் வாழ்ந்து வருகின்றனர். அவற்றைக் கண்டு அஞ்சிய மனிதர்கள் தமது ஆற்றலுக்கும் விஞ்சிய சக்தி ஏதோ ஒன்று இருப்பதாக எண்ணி அவற்றையே தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். முதலில் தன்னைச் சுற்றியுள்ள மரம், செடி கொடிகளையே வழிபட்டுக் கொண்டிருந்தவர்கள், பின் ஒரு கல்லை நட்டு அக்கல்லை தெய்வமெனக் கருதி வழிபட்டனர். அந்தக் கல்லிற்கு அவர்கள் தங்களுக்குக் கிடைத்த மலர், கனிகளைச் சாற்றி வணங்கி இன்பமுற்றனர். அதேபோன்று தாங்கள் வேட்டையாடிய மாமிசங்களைக் கடவுள்களுக்கு படையலிட்டும் மகிழ்ந்தனர். அவையே இன்றளவும் தொடர்ந்து நேர்த்திக்கடனாகவோ, வேண்டுதல்களாகவோ

கோவில்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தற்காலச் சூழலில் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப சிலைகளை வடித்து அவற்றிற்கு காரணகாரியப் பெயர் சூட்டி வழிபட்டு வருகின்றனர். இவ்வாறாகத் தெய்வங்களும் அவற்றிற்கான திருவிழா அமைப்பு முறைகளும் உருவாகியது. அதன் அடிப்படையில் கோபி வட்டாரத்தில் உள்ள கள்ளியங்காட்டு மாரியம்மன் கோவிலின் வரலாறு மற்றும் திருவிழாக்கள் குறித்த செய்திகளை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## கோவில் அமைவிடம்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து ஈரோடு செல்லும் சாலையில் எட்டாவது கிலோ மீட்டர் தொலைவில் ஒத்தக்குதிரை என்னும் ஊரில் அமைந்துள்ளது ‘கள்ளியங்காட்டு மாரியம்மன் திருக்கோவில்’.

## மாரியம்மன் பெயர்க் காரணம்

நாட்டுப்புறத் தெய்வங்களில் முதன்மை பெறுவது மாரியம்மன் தெய்வம் ஆகும். கோடை காலங்களில் ஏற்படும் வெப்பத்தால் மக்களுக்கு ‘அம்மை’ போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. அம்மை போன்ற கோடைகால நோய்கள் வராமல் தடுக்க மழை வேண்டி வழிபடத் தொடங்கிய கடவுளே ‘மாரியம்மன்’ எனப்படுகிறது. ‘மாரியம்மன்’ என்பதிலுள்ள ‘மாரி’ என்பது ‘மழை’ என்ற பொருளைக் குறிப்பதாகும். மாரியம்மன் கோவில்களில் பல நோய்களைப் போக்கும் ‘வேம்பு’ மரமே தல விருட்சமாகக் காணப்படுகிறது. தாய்த் தெய்வங்களில் ஒன்றாகக் கருதப்படும் மாரியம்மனுக்கு “வெயிலுகந்தாள்”1 என்ற பெயர் வழங்கிய செய்தியை தொ.பரமசிவத்தின் ‘தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்’ என்னும் நூலின் வழி அறிய முடிகின்றது. (ப.எண்-15)

மாரியம்மன் குறித்த தொன்ம வரலாறு

மாரியம்மன் குறித்த வரலாற்றில் தொன்மக் கதைகளும் நாட்டுப்புற நம்பிக்கைகளும் கலந்துள்ளன.

“ரைவத ராஜன் என்ற மன்னனின் மகள் ரேணுகாம்பாள். அவளுக்கும் ஜமதக்கினி முனிவருக்கும் மணமாகிறது. இந்த இணையருக்கு பரசுராமன் என்ற மகன் பிறக்கின்றான். ரேணுகா தன் கற்பின் ஆற்றலால் அபாரமான சக்தியைக் கொண்டிருக்கிறாள். அவள் வெறுங்கையோடு ‘பத்ம சரஸ்’ என்னும் சுனைக்கு சென்று தனது சக்தியால் தண்ணீரையே ஒரு குடமாகச் செய்து அக்குடத்தில் தன் கணவரின் சடங்குகளுக்கு வேண்டிய நீரைக் கொண்டு வருவாள்.

வழக்கம் போல் அச்சுனைக்கு நீர் கொண்டுவர அவள் சென்ற போது அங்கு வானில் அழகு வாய்ந்த கந்தர்வன் ஒருவனைக் காண்கிறாள். இதனால் அவளது கற்பினால் பெற்ற ஆற்றலை இழக்கிறாள், முன்பு போல் அவளால் நீரைக் கொண்டு குடம் செய்ய முடியவில்லை. இதை அறிந்த ஜமதக்கினி கோபம் கொண்டு மகன் பரசுராமனை அழைத்து அவனது தாயின் (ரேணுகாம்பாலின்) தலையைத் துண்டிக்கும்படி கட்டளையிடுகிறார். அவனும் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுகின்றான். இதனால் நிம்மதியடைந்த ஜமதக்கினியும் மகனிடம் என்ன வரம் வேண்டுமென கேட்கின்றார். அதற்கு அவன் தன் தாயார் உயிர் பெற வேண்டும் என்பதையே வரமாகக் கேட்கின்றான்.

ஜமதக்கினியும் உயிர்பிக்கத் தன்னிடம் உள்ள அற்புத சக்தி வாய்ந்த தீர்த்தத்தை மகனிடம் கொடுத்து மனைவியை உயிர்பிக்கச் சொல்கின்றார். பரசுராமனும் அந்த தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு தன் தாயின் தலை துண்டிக்கப்பட்ட இடத்திற்கு செல்கின்றான். அங்கு தன் தாயின் தலையைத் துண்டிக்கும் முன் அதைத் தடுக்க வந்த பறையர் பெண் ஒருவரின் தலையையும் துண்டித்திருப்பான். உயிரற்றுக் கிடக்கும் இருப்பெண்களின் தலைகளையும் மாற்றிப் பொருத்தி உயிர்ப்பித்து விடுகிறான். இருவரில் யாரைத் தாயென்று அழைப்பது என்று தெரியமாலிருக்க, தந்தை (ஜமதக்கினி) தலைப்பகுதி எவர் உடம்பில் இருக்கின்றதோ அவரே உன் தாய் என்று கூறிவிடுகின்றார். இதில் கொல்லப்பட்டு மீண்டும் உயிர் பெற்ற மற்றொரு பெண்ணின் பெயரே ‘மாரியம்மன்’ என்று வழங்கப்படுவதாக செவிவழி செய்திகள் கூறுகின்றன”. “வண்ணார் வீட்டில் வளர்க்கப்பெறும் முளைப்பாரியோடு வணங்கப்பெறும் ரேணுகாதேவி என்னும் தெய்வம் மாரியம்மனின் மாற்று வடிவம் என்று கருதப்படுகின்றது”2. இக்குறிப்பு ‘தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்’ என்னும் நூலில் பக்கம் எண் 19-ல் கூறப்பட்டுள்ளது.

## கோவில் தோன்றிய வரலாறு

“கோவிலின் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் மக்கள் தங்களது ஆநிரைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்வது வழக்கம். ஊரின் மையப் பகுதி கள்ளிக்காடுகள் சூழ்ந்து காணப்படுகின்றது. அப்பகுதி மக்கள் கள்ளிக்காடுகளுக்கு இடைப்பட்ட மேய்ச்சல் நிலங்களில் கறவை மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதில் ஒரு கறவை மாடு மட்டும் மாலை பால் கறக்கையில் பால் சுரப்பதில்லை. ஏன் இந்த கறவை மாடு இப்படி செய்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க, அடுத்த நாள் மேய்ச்சல் நிலத்திற்கு சென்று கறவை மாட்டின் செயலை கவனித்தனர். அக்கறவை மாடு பன்னிரெண்டு மணிக்கு போல் அங்கிருந்த ஒரு கல்லின் மேல் பால் பொழிந்து விடுவது தெரியவந்தது.

கறவை மாடு அங்கு ஏன் பால் பொழிகிறது என்பதை அறிய கடப்பாறை, மண்வெட்டி கொண்டு மாடு பால் பொழிந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தனர். அவ்விடத்தில் ஒரு கல் மண்ணில் பாதி புதைந்த வண்ணம் இருந்தது. அக்கல்லை முழுவதுமாகப் பெயர்த்தெடுக்க முற்பட்டனர். கல்லைப் பெயர்த்தெடுக்க மண்ணைப் பறைக்கும் வேலையில் அக்கல்லின் மீது மண்வெட்டி பட்டு, காயம் ஏற்பட்டுவிடுகிறது. காயம் ஏற்பட்ட இடத்திலிருந்து இரத்தமாக வழிகிறது.

இரத்தம் வழிந்தோடிய பகுதி பள்ளமாக மாறியது. அந்த பள்ளம் இன்றும் கோவிலின் பின் புறம் உள்ளது. இந்நிகழ்விற்குபின் அக்கல்லையே அப்பகுதி மக்கள் தெய்வமெனக் கருதி வழிபடத்தொடங்கினர். கள்ளிக்காடுகள் சூழ்ந்த பகுதியில் இக்கோவில் அமைந்திருப்பதால் கள்ளியங்காட்டு மாரியம்மன் கோவில் என்று வழிபடப்படுகிறது. இக்கோவில் சுமார் ‘முந்நூறு ஆண்டுகள்’ பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது”3 என்று தகவலாளர் மணி கூறுகின்றார்.

“கோவில் தோன்றிய காலத்தில் ஓலை சாலை மட்டுமே அமைத்து கோவில் நடத்தி வந்தனர். அதன் பின் பல வருடங்கள் கழித்து அம்மனுக்கு கோவில் கட்டலாம் என முடிவு செய்து அம்மனிடம் வாக்கு கேட்டுள்ளனர்.

அதற்கு அம்மன் வாக்குக் கொடுக்கவில்லை, மீண்டும் மீண்டும் வாக்கு கேட்கவே பத்துக்கு பத்து இடம் விட்டு கோவில் எழுப்புமாறு வாக்கு கொடுத்ததாகக் கூறுகின்றனர். அதன்பின் சுவர் எழுப்பி, கையோடு பதித்து கோவில் கட்டி வழிபடத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு வழிபடத் தொடங்கிய பின்னரே 1996-ல் கோபுரம் எழுப்பி அம்மனை வழிபடுவதாகத்"4 தகவலாளர் ராசாமணி கூறுகிறார்.

## கள்ளியங்காட்டு மாரியம்மன் பெயர்க்காரணம்

இக்கோவிலானது "கள்ளிக்காடுகள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதால் கள்ளிக்காட்டு மாரியம்மன் என்று பெயர் பெற்று அப்பெயர் காலப் போக்கில் 'கள்ளியங்காட்டு மாரியம்மன்' என வழங்கப்படுவதாகத் தகவலாளர் தேவி கூறுகின்றார்"5. "அம்மை, கண் நோய்களுக்கு சிறப்பு பெற்ற தளமாக இருப்பதால் அம்மனை 'வேப்பிலைக்காரி' எனவும் அழைப்பதாகத் தகவலாளர் செந்தில் குமார் கூறுகின்றார்"6.

கோவிலின் அமைப்பு

## கல்யாண விநாயகர்

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோவிலின் நுழைவுவாயிலில் கல்யாண விநாயகப் பெருமான் சிலை அமைந்துள்ளது. திருமணத்தில் தடை ஏற்படுவோர் இவ்விநாயகரை வேண்டி, அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினால் திருமணத்தில் ஏற்பட்ட தடை நீங்கி, திருமணம் விரைவில் கைக்கூடுவதாக மக்களிடையே நம்பிக்கை நிலவுகின்றது. புதுமணத் தம்பதிகளுக்குக் கல்யாண விநாயகர் முன்பேத் திருமணம் நடைபெறுகின்றது. கோவிலில் திருமணம் முடிந்த பிறகு வரவேற்பு விருந்திடும் வழக்கம் நம்மக்களிடையே காணப்படுவதால், கோவில் நிர்வாகமே மண்டபம் ஒன்று கட்டியுள்ளது.

## கொடி மரம் & தூரிக்கல்

கோவிலின் உள்ளே நுழைந்ததும் அம்மனுக்கு முன்பாகக் கொடிமரமும் அதற்கு முன்பாகத் தூரிக்கல்லும் அமைந்துள்ளது. அம்மனை வழிபட்ட பின்னர் பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்து தூரிக்கல்லை அசைத்து (ஆட்டி) வேண்டுதலை அம்மன் முன் செலுத்துகின்றனர்.

## குதிரைச்சிலை

கோவில் பிரகாரத்தின் வடக்கில், இக்கோவில் தர்மகர்த்தா தன் நினைவாக கோவிலுக்கு வழங்கிய சிலை வைக்கப்பட்டுள்ளது. அச்சிலை பார்ப்பதற்கு ஒரு விவசாயி தன் கையில் குதிரையைப் பிடித்திருப்பது போன்ற வடிவத்தில் வடிவமைத்துள்ளனர்.

## முனியப்பன் சிலை

அதைத் தொடர்ந்து கோவில் பிரகாரத்தின் வடக்கில் இரண்டு முனியப்பன் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை செம்முனி மற்றும் மகாமுனி ஆகும். மக்கள் தங்களுக்கு நேரும் துன்பங்களை முனிகளின் துணைகொண்டு தீர்த்து வாழ்கின்றனர். கோவிலில் பெரும்பூசை எனும் பூசை முடிந்த பிறகு முனிகளின் முன் தாயத்து (எந்திரங்கள்) மந்திரித்து தரப்படுகிறது.

## கருப்பராயன் சுவாமி

அவற்றைத் தொடர்ந்து, பிரகாரத்தின் வடக்கில் இருளிலும் பயத்திலுமிருந்து மக்களைக் காக்கும் கருப்பராயன் சுவாமி அமைந்து மக்களைக் காத்து வருகின்றார்.

## நாகர் சிலைகள்

வயல்வெளிகளில் இருக்கும் எலிகளைக் கட்டுப்படுத்தி விவசாயத்தைக் காப்பதில் நாகங்களின் பங்கு அதிகம் என்பதால் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் தெய்வமான அம்மனுடன் நாகர் சிலைகளையும் வைத்து வழிபடுகின்றனர். நாகர் சிலைகள் பிரகாரத்தின் வடக்கில் அமைந்துள்ளது. நாகர் சிலைகளை ராகு கேது என்றும் கூறுவர். இவை மக்களுக்கு நேரும் துன்பங்களிலிருந்து மக்களைக் காப்பதாகக் கூறுகின்றனர்.

## கன்னிமார் சிலைகள்

முனி, கருப்பராயன், நாகர் சிலைகளைத் தொடர்ந்து பிரகாரத்தின் வடக்கு நோக்கி கன்னிமார் சிலைகள் அமைந்துள்ளது. அம்மன் கிராமத்தின் தாய் என்றால், கன்னிமார்கள் தாய்மையின் துணையாற்றலாக செயல்படுகிறார்கள். வம்சம் விருத்தி அடையவும், குழந்தை பேறு கிடைக்கவும், குடும்ப ஒற்றுமைக்காகவும் மக்கள் கன்னிமார்களை வழிபாடு செய்கின்றனர்.

## விநாயகர் சிலை

கோவில் பிரகாரத்தின் தென்மேற்கில் கிழக்கு நோக்கி விநாயகர் சிலையும், விநாயகர் சிலையிலேயே ஒன்றிணைந்த அதன் வாகனமான மூஞ்சூறு உருவமும் செதுக்கப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகக் கருதப்படுகிறது. இவரை வணங்கினால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. இவ்விநாயகர் 'குபேர விநாயகர்' எனவும் அழைக்கப்படுகின்றார். இவரே ஆதியிலிருந்து வழிபடுகின்ற விநாயகர் எனவும் கூறப்படுகிறது.

## சிவலிங்கம்

விநாயகரைத் தொடர்ந்து தென்மேற்கில் கிழக்கு நோக்கி சிவலிங்கம் அமைந்துள்ளது. சிவலிங்கத்திற்கு எதிரில் சிவனின் வாகனமான நந்தி சிலை அமைந்துள்ளது. சிவ சக்தியின் வழிபாட்டுத் தலமாகவும் உள்ளது. அம்மன் கோவிலில் சிவலிங்கத்தின் சிலை இருப்பது சிறப்பிற்குரியதாகக் கருதப்படுகிறது. கரியகாளி அம்மனை வணங்கினால் கணவன் மனைவி இடையே உள்ள மனக்கசப்புகள் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

## சின்ன மாரி, பெரிய மாரி

பிரகாரத்தின் கிழக்கு நோக்கி சின்ன மாரி மற்றும் பெரிய மாரி சிலைகள் அமைந்துள்ளது. இவர்கள் அம்மனுடன் சேர்ந்து மக்களைக் காத்து வருகின்றனர். கோவிலில் இவர்களுக்கென தனி ஊஞ்சலும் அமைத்துள்ளனர். சின்ன மற்றும் பெரிய மாரி ஒன்றிணைந்து மக்களுக்கு நேரும் துன்பங்களையும், அம்மை போன்ற உடல் நோய்களையும், குடும்பத்தில் உள்ளவர்களின் கருத்து வேறுபாடுகளையும் நீங்கச் செய்கின்றன.

## கள்ளியங்காட்டு மாரியம்மன்

கருவறையில் எழுந்தருளியுள்ள மாரியம்மன் சுயம்புவாகத் தோன்றியதாகும். கடப்பாறை பட்டுக் காயம்பட்ட இடத்தில் தினந்தோறும் வேப்பிலை அரைத்துப் பூசிய பிறகே பூசைகள் நடைபெறுகின்றன. கருவறை வாயிலின் இருபுறமும் பாலத் துர்க்கைகளின் சிலைகள் வாயிற்காவலர்களாக உள்ளன. கோவிலின் சுவர்கள் பெரும்பாலும் மண்ணால் கட்டப்பட்டுள்ளன. கோவிலில் 2023-ம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கு விழா குறித்த குறிப்புகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

தல விருட்சம்

ஊஞ்ச மரம் (காசு ஊஞ்சை), ஆல மரம் ஆகிய மரங்கள் கோவிலின் தல விருட்சங்களாக உள்ளன.

## நீர் விருட்சம்

கோவிலுக்கென்று தனிக்கிணறு வெட்டியுள்ளனர். கோவிலின் பயன்பாட்டிற்கும், சுற்றுவட்டாரத்தில் உள்ள கோவில்களான தாசம்பாளையம் மாரியம்மன் கோவில், கோமாளிகரை செல்லாண்டியம்மன் கோவில் போன்ற கோவில்களுக்குத் திருவிழாக் காலங்களில் கம்பம் குளிப்பாட்டுவதற்கு இக்கோவிலின் கிணற்று நீரையே பயன்படுத்துகின்றனர்.

## திருவிழா

‘‘விழா’ என்னும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறித்துகொள்ள முடியும்’ என்கிறார் இரவீந்தரநாத் தாகூர். தமிழர் சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களே ஆகும். இச்செய்தியைக் குறுந்தொகையின் “சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற”7 (குறும்.41:2) என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது. இதில் வரும் ‘சாறு’ என்னும் சொல் ‘விழாவினைக்’ குறிக்கின்றது.

நாற்பத்தியெட்டு கிராம மக்களால் வழிபடப்படும் இக்கோவில் திருவிழா வெகுவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. திருவிழாவானது ஆண்டு தோறும் வருகின்ற சித்திரை மாதம் வியாழன் கிழமையன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## பூச்சாட்டுதல்

சித்திரை மாதம் புதன் கிழமை அன்று அம்மனுக்கு பூச்சாட்டுதல் நடைபெறுகின்றது. அம்மனிடம் வாக்கு கேட்டப் பின்னரே பூச்சாட்டுதலானது நடைபெறுகின்றது.

## கம்பம் நடுதல்

பூச்சாட்டுதலுக்கு அடுத்த புதன் கிழமை காலை வேளையில் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கம்பம் வெட்டச் செல்கின்றனர். அம்மன் பூசாரியின் உடலில் வந்து இந்த மரத்தை தான் வெட்ட வேண்டுமென்று வாக்கு கொடுப்பதாகக் கூறுகின்றனர். பின் வெட்டி வந்த மரம் கம்பமாக தாயர் செய்யப்பட்டு பூசை செய்து நடப்படுகிறது. கம்பம் நடுதல் நிகழ்வின் போது பூசணிக்காயை குழியில் இடுதல் என்பது வழக்கத்தில் உள்ள ஒன்றாகும்.

### அம்மை அழைத்தல்

கம்பம் நடுதல் முடிந்து, வருகின்ற புதன் கிழமை அம்மை அழைத்தல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பூந்தேர் சூடித்து, போலக் கூடை எடுத்து வந்து குதிரைத் துளுக்கு கேட்ட பின்னரே அம்மை அழைத்தல் நிகழ்வானது நடைபெறுகின்றது. அம்மை அழைத்தலானது வெட்டுக்கிராய் என்னும் பகுதியில் உள்ள தெய்வத்தினையும் (அம்மை அழைப்பதற்கு முதன்மை தெய்வம்), சுற்று வட்டாரத்தில் உள்ள மற்ற தெய்வங்களின் பெயரினையும் சொல்லி அழைத்து வருவதாகும். அம்மை அழைத்து வந்த பிறகு ஊஞ்சலில் அம்மன் துதி பாடல்கள் பாடப்படுகின்றன.

### பொங்கல் வைத்தல் மற்றும் கிடாய் வெட்டுதல்

திருவிழாவன்று காலை பொங்கல் வைத்து அம்மனை வழிபடுகின்றனர். பொங்கல் வைத்தல் நிகழ்வானது காலங்காலமாக தமிழர் பண்பாட்டில் முக்கியம் இடம் பெற்று வருகின்றது. நம் முன்னோர்கள் தோட்டத்தில் விளைச்சல் பெருகவும், வீட்டில் இருப்பவர்கள் நோய்நொடி இன்றி சுகத்துடன் வாழவும், தங்களை நம்பி உள்ள கால்நடைகளின் சுகம் பேனவும் வேண்டி பொங்கல் வைத்து, கிடாய் பலியிட்டு வழிபட்டு வருகின்றனர். அதையே இன்றளவும் நாம் கடைபிடித்து பொங்கல் வைத்து, உயிர் பலியிட்டு வழிபாடு செய்கின்றோம். உயிர் பலியிடுவதன் மூலம் அம்மனின் கோபம் குறைவதாகவும் கூறப்படுகின்றது. காலையில் இருந்தே கிடாய் வெட்டுதல் என்பது தொடங்குகின்றது.

### பெரும் பூசை

பொங்கல் வைத்து கிடாய் வெட்டிய பிறகு மதியம் பன்னிரெண்டு மணியளவில் 'பெரும் பூசை' நடைபெறுகின்றது. பெரும் பூசையின் போது பழம், தேங்காய், வெற்றிளை, பாக்கு, பொங்கல் ஆகியவற்றினைப் படைத்துப் பூசை செய்கின்றனர். பெரும் பூசை செய்யும் பூசாரி துண்டுத்துணியால் வாயை கட்டிய வண்ணமே பூசை செய்கின்றார்.

### அலகு எடுத்து வரல்

திருவிழாவன்று மாலை ஐந்து முதல் ஆறு மணியளவில் சுற்று வட்டாரத்தில் உள்ள மக்களால் பதினாறு முதல் பதினெட்டு அடி வரை உள்ள அதாவது இரண்டு மனிதன் உயரம் அளவுள்ள அலகானது குத்தி மேள தாளத்துடன் எடுத்து வரப்படுகிறது. "ஆண்டு தவராமல் அம்மனுக்கு அலகு எடுத்து வந்து வேண்டுவதல் வைக்கும் வழக்கம் பின்பற்றப்படுவதாகத்"8 தகவலாளர் முருகன் கூறுகின்றார்.

### மாவிளக்கு

அலகு குத்தி வருபவர்களுக்குப் பின்னலேயே ஆறு முதல் ஏழு மணிக்குள் மாவிளக்கு எடுத்து வரும் பக்தர்கள் கோவிலுக்கு மாவிளக்கு எடுத்து வருகின்றனர். மாவிளக்கானது உரிய அலங்காரத்துடனும் வான வெடிக்கைகளுடனும் மேள தாளங்களுடனும் பிரமாண்டமாக எடுத்துவரப்படுகிறது. மற்ற அம்மன் கோவில்களைக் காட்டிலும் மாலை நேரங்களில் மாவிளக்கு எடுத்து வந்து அம்மனை வழிபடுவது என்பது மாறுபட்டதாக உள்ளது.

## அக்னி அபிஷேகம்

திருவிழா நாளின் இறுதிப் பூசையாக அமைவது அக்னி அபிஷேகம் ஆகும். அக்னி அபிஷேகம் முடிந்த பிறகு அம்மன் சன்னதி அடைக்கப்படுகிறது. பிறகு அடுத்த நாள் காலைவேளை பூசை நடைபெறுகிறது. அதன் பின் அன்றாட பூசைகள் வழக்கம் போல் நடைபெறுகின்றன.

## கம்பம் எடுத்தல்(அ)பிடுங்குதல்

மாவிளக்கு எடுத்து வந்து பூசை முடிந்த பின்னர் சுமார் ஏழு மணிக்கு மேல் கம்பம் பிடுங்குதல் நிகழ்வானது நடைபெறுகின்றது. இத்தனை நாட்கள் நாம் வழிபட்ட கம்பம் அம்மனின் கணவனாகக் கருதப்படுவதால் கம்பம் பிடுங்கும் போது அம்மன் திரையானது மூடப்படுகிறது. கம்பம் பிடுங்கும் முன் பூசாரி அருள் வாக்கு கூறுவது வழக்கமாக உள்ள ஒன்றாகும். அவ்வாக்கை அம்மன் கூறும் வாக்காகவே மக்கள் கருதுகின்றனர். பிடுங்கிய கம்பமானது கோவிலின் பின்னால் உள்ள குளத்தில் (வீசப்படுகிறது) இடப்படுகிறது.

## மஞ்சள் நீர் உற்சவம் (அ) மஞ்சள் நீராட்டு

திருவிழா முடிந்த அடுத்த நாள் மஞ்சள் நீர் உற்சவம் எனப்படும் மஞ்சள் நீராட்டு விழா நடைபெறுகின்றது. மதிய நேர பூசைக்கு பின் மஞ்சள் நீராட்டு விளையாடப்படுகிறது. மதியம் ஒரு மணிக்கு மேல் ஆரம்பித்து நான்கு மணி வரை மஞ்சள் நீராடல் விளையாடப்படுகிறது. மஞ்சள் நீராட்டானது சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் மகிழ்ச்சியாக விளையாடப்படுவதாகும். மஞ்சள் நீரின் போது அம்மனைத் தேரில் அலங்காரம் செய்து கோவிலை மூன்று முறை வலம் வந்து பூசை செய்யப்படுகின்றது. அப்பூசையின் போது பொறி, கடலை மற்றும் மிளகு வீசி பூசை செய்யப்படுகிறது.

## மறுபூசை அம்மன் ஊஞ்சல் உற்சவம்

திருவிழா முடிந்து வருகின்ற திங்கள் கிழமை அன்று மறுபூசை நடைபெறுகிறது. அம்மனின் கோபம் தனிந்து மகிழ்ச்சியடைந்து மீண்டும் மக்களை நோய் நொடிகளிலிருந்து காத்தருள வேண்டி இம்மறுபூசை நடைபெறுவதாகவும் நம்பப்படுகின்றது. மறுபூசை அன்று அம்மனுக்கு சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன.

## கோவிலின் சிறப்பு

நாள்தோறும் ஒரு கால வேளைப் பூசை நடைபெற்று வருகின்றது. கயிறு மந்திரித்தல், எந்திரம் கட்டுதல் முதலிய வைத்திய முறைகள் கோவிலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிலில் வாக்கு கேட்டல் நிகழ்வு சிறப்பாக நடைபெறுகிறது. அம்மன் வாக்கு கொடுத்தால் "கண்களில் குறைபாடு உள்ளவர்கள், கண்களில் பூ விழுந்தவர்கள் - காலை நேரத்தில் அம்மன் முன் வேப்பிலை அரைத்து அதில் வரும் நீரை கண்களில் விட்டு செல்கின்றனர், பின் மீண்டும் மாலையில் கோவிலுக்கு வந்து, அம்மனுக்கு பூசை செய்து வழங்கும் தீர்த்தத்தைக் கண்களில் ஒத்திக் (ஊற்றி) கொள்கின்றனர். இப்படி செய்வதால் கண்களில் ஏற்பட்ட குறைபாடு முழுவதும் நீங்குவதாக மக்கள் நம்புகின்றனர்"9 என்று தகவலாளர் சிவக்குமார் குறிப்பிடுகின்றார். கண்

தொடர்பான நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்கப்படாத காலத்திலிருந்தே கள்ளியங்காட்டு மாரியம்மன் கோவிலில் கண் வைத்திய முறை நடைபெற்று வருவது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“அம்மை போன்ற வெப்பு நோய்கள் விரைவில் குணமடைய இக்கோவிலுக்கு வந்து வேப்பிளை பத்திரி வாங்கிச் சென்று கைப்படாமல் அம்மை மேல் பூசினால் விரைவில் குணமடைகின்றது”10 என்று தகவலாளர் காளியப்பன் கூறுகின்றார்.

திருமண வாக்கு கேட்டல் என்பது சிறப்பாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அம்மன் வாக்கு கொடுத்து முடித்த திருமணத்தில் எந்த குறையும் வந்ததில்லை என்று பக்தர்கள் கூறுகின்றனர்.

பெரும் பூசை முடிந்த பிறகு உடல் நலம் சரியில்லாதவர்கள், கை கால்களில் குறைபாடு உடையவர்கள், இரவில் ஏதேனும் உருவத்தை கண்டு பயந்தவர்களுக்கு அவர்களின் குறைகளுக்கு ஏற்ப சிவப்பு மற்றும் பச்சை நிறக் கயிறுகளும், எந்திரங்களும் மந்திரித்து தரப்படுகின்றது. குழந்தைகளுக்கு தாயத்து மந்திரித்து தரும் வழக்கமும் உள்ளது. அதேபோன்று கால்நடைகளுக்கு உடல்நிலை சரியில்லாத போது அவைகளை அழைத்து வந்து எந்திரம் கட்டும் வழக்கமும் நிலவுகிறது.

திருவிழா நாட்களிலென்று மட்டுமில்லாமல் வாரந்தோறும் செவ்வாய் கிழமை அம்மனுக்கு வேண்டுதல் வைத்து தீர்த்தம் வழங்குபவர்கள் தீர்த்தம் வழங்குகின்றனர்.

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் எந்த நாளில் வேண்டுமானாலும் கிடாய் வெட்டும் வழக்கம் உள்ளது. இந்நிகழ்வு மற்ற கோவில்களைக் காட்டிலும் இக்கோவிலில் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

அம்மன் கோவில் என்பதால் அம்மனுக்கான சிறப்பு நாட்களில் சிறப்பு விழாக்களும், சிவன், விநாயகர் போன்ற ஆண் தெய்வங்களுக்கு அம்மாவாசை, பௌர்ணமி, பிரதோசம் போன்றவையும் சிறப்பாகக் கருதப்படுகிறது.

## முடிவுரை

பரந்து விரிந்த உலகில் தனித்து வாழும் மனிதன் இயற்கை சீற்றங்களைக் கண்டு அஞ்சி வாழ்ந்தான். அப்படி அஞ்சி வாழ்ந்தவன் கடவுள் வழிபாட்டில் ஈடுபடத் தொடங்கினான். வழிபாடு என்னும் ஒன்று மக்களிடையே தோன்றிய பின் வருடம் ஒரு முறை அக்கடவுளுக்கு விழா எடுத்து சிறப்பிக்கும் வழக்கம் தோன்றியது. விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம்நாட்டு மக்களை நாம் அறிந்து கொள்ள முடியும் என்பதை பலரும் கூறியுள்ளனர். அப்படித் தோன்றிய விழாக்களைத் தொடர்ந்தே சடங்குகள் தோன்றின எனலாம். இவ்வறே கடவுள் வழிபாடும் நம்பிக்கையும் பரவியது. இக்கோவிலில் காணப்படும் கண் வைத்திய முறை மற்ற கோவில்களைக் காட்டிலும் வேறுபட்ட ஒன்றாகவேக் கருதப்படுகின்றது.

## துணைநூற் பட்டியல் (References)

1. தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்: தொ.பரமசிவம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600 050.

2. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்: சாமி. சிதம்பரனார், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600 050.
3. குறுந்தொகை மூலமும் உரையும் (பல்வகை ஆய்வுப் பகுதிகளுடன்): தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை – 613 010
4. நாட்டுப்புற இயல் ஆய்வு: முனைவர் சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108.

## தகவலாளர் பட்டியல்

| வ.எண் | பெயர் | வயது | பாலினம் | தொழில் | ஊர் |
|---|---|---|---|---|---|
| 1. | மணி | 65 | ஆண் | சுயதொழில் | தாசம்பாளையம் |
| 2. | ராசாமணி | 63 | ஆண் | விவசாயம் | தாசம்பாளையம் |
| 3. | தேவி | 55 | பெண் | இல்லத்தரசி | ஒத்தக்குதிரை |
| 4. | செந்தில் குமார் | 57 | ஆண் | மருந்தகம் | ஒத்தக்குதிரை |
| 5. | முருகன் | 65 | ஆண் | இஸ்திரி | தாசம்பாளையம் |
| 6. | சிவக்குமார் | 50 | ஆண் | விவசாயம் | ஒத்தக்குதிரை |
| 7. | காளியப்பன் | 60 | ஆண் | விவசாயம் | ஒத்தக்குதிரை |